மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: திருமங்கலம் அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு 30—12—1977 நாளிட்ட அரசு ஆணையில் புதிய கட்டிடம் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

Semester System in Colleges

* Q. 496—THIRU R. UMANATH: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether there is widespread opposition to the introduction of Semester System in Colleges;

(*b*) if so, in how many colleges the resentment was expressed and in what forms; and

(*c*) action taken by the Government to consider their demand?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) கல்லூரிகளில் ஸெமெஸ்டர் திட்டம் அறிமுகப்படுத்தியுள்ளதற்குப் பரவலாக எதிர்ப்பு எதுவுமில்லை. சில தனியார் கல்லூரி மாணவர்கள் மட்டும் தாங்கள் அளித்துள்ள பல கோரிக்கைகளில் ஒன்றாக செமஸ்டர் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

(ஆ) மேற்கண்ட விடையில் குறிப்பிட்டவாறு தங்களுடைய பல கோரிக்கைகளில் ஒன்றாக செமஸ்டர் திட்டத்திற்கு எதிர்ப்பினை 13 தனியார் கல்லூரி மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

(இ) அரசு நடவடிக்கை எடுக்க இதில் எதுமில்லை.

(முற்பகல் 9-40.)

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, செமஸ்டர் சிஸ்டம் முறையை எதிர்த்துப் பல கல்லூரிகளில் நூற்றுக்கு நூறு மாணவர்கள் கடுமையான வேலைநிறுத்தம், போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள் என்பது உண்மை. அது அரசாங்கக் கல்லூரியா அல்லது தனியார் கல்லூரியா என்பது பிரச்சனை யல்ல. அதில் மாணவர்கள் பயப்படுவதற்குக் காரணம் 'இன்டர்னல் அசஸ்மென்ட்' மார்க்கையும் சேர்த்துத்தான் பாஸ் அல்லது ஃபெயில் என்று அறிவிக்கிறார்கள். அதனால் ஆசிரியர்கள் வேண்டுமென்றே தாங்கள் விரும்பாத மாணவர்களை வெற்றிபெறச் செய்யாமல் செய்துவிடுவார்கள் என்ற ஆழமான அச்சம் இருக்கிறது. ஆகவே, இந்த இன்டர்னல் அசஸ்மென்ட் முறை

1978 மார்ச் 10]

கைவிடப்படுமா? இல்லை என்றால் அச்சத்தைத் தீர்ப்பதற்கு என்ன நடைமுறையை அரசு எடுக்கப் போகிறது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இந்த முறை பல்கலைக் கழக மானியக் குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டு, அதைப் பல்கலைக் கழகங்கள் நடைமுறைப்படுத்தி வருகின்றன. அரசாங்கம் இந்த முறையைக் கொண்டுவரவில்லை. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த மாணவர்களைச் சந்தித்தபோது செமஸ்டர் சிஸ்டம் நல்லது என்று விளக்கிச் சொன்னபோது அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல தவறு ஏற்படுகிறது என்று தெரிந்தால் அதை நிவர்த்தி செய்வதற்கு ஒரு வழி வைத்திருக்கிறார்கள். எந்த மாணவருக்காவது பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது அல்லது வேண்டுமென்றே தன்னை விட இன்னொரு மாணவருக்குக் கூடுதலாக மார்க் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் அவர் அப்பீல் செய்யலாம். அப்பீலில் அதைச் சரிபார்ப்பதற்கு வேண்டிய ஆதாரங்கள் இருக்கின்றன. ஒரு ஆசிரியர் வேண்டுமென்றே தவறு செய்திருக்கிறார் என்று தெரிந்தால் அவர்மீது நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. பல்கலைக்கழக கல்வி சம்பந்தப்பட்டவரை இந்த அக மார்க் 40 என்று வைத்திருப்பதை, நம்முடைய பல்கலைக்கழகமும் 25 மார்க்காகக் குறைத்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. செளந்திரராசன்: தலைவரவர்களே, இந்த செமஸ்டர் சிஸ்டத்திலே வேண்டுமென்றே ஆசிரியர்கள் மாணவர்களைப் பழி வாங்கி விடுவார்கள் என்ற அச்சம் மாணவர்களுக்கு இருக்கிறது. குறிப்பாக, பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற அச்சம் இருக்கிறது என்பதை அரசு அறியுமா? அப்படியானால் அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்து, அந்த அச்சத்தைப் போக்கப் போகிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, ஏற்படுகிற தவறுகளைக் கண்டுபிடித்து தண்டனை அளிக்கப்படும் என்ற உறுதியினை நாம் அளித்திருக்கிறோம். ஆனால் செமஸ்டர் சிஸ்டம் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு நல்ல பயனைத் தந்திருக்கிறது என்பதை புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

திரு. எ. ரகுமான்கான் : தலைவரவர்களே, இந்த செமஸ்டர் சிஸ்டத்தில் இருக்கிற இன்டர்னல் அசெஸ்மெண்ட் முறையை எதிர்த்து சட்டக்கல்லூரி மாணவர்கள் போராடினார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள்மீது வழக்கு இருக்கிறது. இப்போது சட்டக் கல்லூரி தேர்வு நடைபெற இருக்கிறது. வழக்கு இன்னும் முடியாமல் இருப்பதால் கைதானவர்கள் தேர்வு எழுத முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, சட்டக்கல்லூரி மாணவர்கள் மீது இருக்கிற வழக்கை திரும்பப்பெற்றுக் கொண்டு, அவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர்களே, வழக்குப் போட்டிருப்பது சட்டக்கல்லூரி மாணவர்களைத் தண்டிக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்திற்காக அல்ல என்பதை வழக்கறிஞரான உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அந்த வன்முறை சம்பவங்கள் மீண்டும் உருவாகாமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. தேர்வு எழுத சங்கடங்கள் இருந்தால் நீதிமன்றத்தில் எடுத்துச் சொல்லி, வாய்தா பெற்றுக் கொள்ளலாம்.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தினால் பிற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்ன நன்மை இருக்கிறது என்று அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்த சிஸ்டம் இல்லாதபோது தேறிய மாணவர்களின் எண்ணிக்கையை விட இந்த முறை புகுத்தப்பட்ட பிறகு அதிகமான மாணவர்கள் தேறுவதே பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குப் பலன் அளிப்பதாக அதாவது பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அதிகமாக தேறுவதாக இந்த அரசு எடுத்துக் கொள்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மொழிப் பிரச்சினை குறித்த தகவல்.

*வினா 497—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொழிப் பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமர் அவர்களிடமிருந்து 1977 ஜுலை மாதத்தில் கடிதம் ஏதேனும் வந்துள்ளதா?